DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE,
NAGAPATTINAM

**அமர்வு வழக்கு எண். 72/2022**

**Deposition of witness for prosecution : PW- 3 (LW 2)**

| **Name** | ராஜா | **Father's Name** | அய்யாக்கண்ணு |
|---|---|---|---|
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 19.10.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேளாங்கண்ணியில் வசித்து ஆட்டோ ஓட்டுனரா வேலை செய்து வருகிறேன், அ.சா.1, ஐ எனக்கு தெரியும். நான் கடந்த 13.02.2019 ம் தேதி வேளாங்கண்ணி அருள்செல்வம் விடுதி வாசலில் நின்று கொண்டிருந்தேன். அப்போது வேளாங்கண்ணி போலீசார் விடுதி வாசலுக்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது நான் அருகில் இருந்ததால் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் அதில் சாட்சி கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னுடன் வடவூரைச்சேர்ந்த ராஜேந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரியின் தரப்பிலான குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, அதை போலீசார் என்னிடம் படித்தும் காட்டவில்லை. நான் ஆட்டோ ஓட்டுனர் என்பதால் போலீசார் என்னிடம் சகஜமாக பழகுவேன் என்றால் சரிதான். அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவேன் என்றால் சரிதான். அதுபோல் காவல் நிலையம் சென்றபோது காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசரில் கையெழுத்து செய்து விட்டு தற்போது விவரங்கள் எதுவும் தெரியாமல் சம்பவ இடத்தில் சாட்சி கையொப்பம் போட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**